பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 22 வெள்ளிக்கிழமை 08.12.2023 கதிர் 392

# ஒருமித்த இலங்கைக்குள் அனைவருக்கும் சமஉரிமை

## தீர்வு குறித்து அயலுறவுத்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவிப்பு

தமிழர்களுக்கு அவர்களின் உரிமை வழங்கப்படவேண்டும். அதேநேரம் பிரிவினைவாதம் தோற்றம் பெறுவதையும் தடுக்கவேண்டும். ஒருமித்த நாட்டுக்குள் அனைவருக்கும் சமவுரிமைவழங்கப்படும்என்று அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற2024வரவுசெலவுத் திட்டத்தின் வெளிநாட்டலுவல்கள்அமைச்சு,தொழில்மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் ☞2

## இது ரகசியம் அல்ல!

புலம்பெயர்தமிழர்அமைப்புக்களில் முக்கியமான ஒன்று உலகத் தமிழர் பேரவை. போர் முடிவுக்கு வந்து போராட்டக்களத்திலிருந்துவிடுதலைப் புலிகள் அமைப்பு அகற்றப்பட்ட பின்னர் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு. 2009ஒகஸ்ட்மாதம்பிரான் நாட்டின் தலைநகர் பாரிஸில் உலகத் தமிழர் பேரவை தொடங்கப்பட்டது. இதன் முதல் தலைவராக வண. பிதா எஸ்.ஜே.இமானுவேல் பதவி வகித்தார். உலக நாடுகள் மத்தியில் ஈழத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் லாபி செய்வது இந்தக் குழுவினரின் முக்கிய பணியாக இருக்கின்றது.

2015இல் இந்த அமைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சமரசம் செய்துகொண்டது. ☞2

## அடுத்த ஆண்டில் தேர்தல் நிச்சயம்

### மகிந்த திட்டவட்டம்

அடுத்த ஆண்டு நிச்சயம் தேர்தல் நடக்கும். அது ஜனாதிபதித் தேர்தலா நாடாளுமன்றத் தேர்தலா என்பதை உறுதிப்படுத்த முடியாது. ஆனால் தேர்தல் நிச்சயம் என்றார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

மத்தேகொடயில்உள்ளவிகாரையில் நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டார் மகிந்த ராஜபக்ச. அதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம்பேசினார். இப்போது அவர் தெரிவித்ததாவது: ☞2

### யார் ஆட்சியில் இருந்தாலும்

## தமிழர்களின் பிரச்சினைக்கு உடன் தீர்வு சாத்தியமில்லை

### இப்படிக் கூறுகின்றார் எதிர்க் கட்சித் தலைவர்

யார் ஆட்சியில் இருந்தாலும்தமிழர்களின் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு வழங்க முடியாது. இருந்தாலும் வடக்குஇ கிழக்கில் வாழும்தமிழ்முஸ்லிம்இ சிங்கள சமூகங்களும் நாட்டின் ஏனைய பகுதி மக்களும்ஒன்றிணைந்து வாழக்கூடிய இலங்கையை கட்டியெழுப்புவதற்கு நாம் உழைக்க வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ. நேற்று இடம்பெற்ற 2024 வரவு செலவு திட்டத்தின் வெளிநாட்டலுவல்கள்அமைச்சு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இரு நாடுகள் என்ற சர்வதேச ஒப்பந்தத்தை மீறி பலஸ்தீனுக்குள் பலவந்தமாக சென்று குடியேற்றங்களை ஏற்படுத்த இஸ்ரேலுக்கு முடியாது. அது தவறு. இஸ்ரேல் பாலஸ்தீனப் பிரச்சினையில் வல்லரசு நாடுகள் இஸ்ரேல் பக்கமே இருக்கின்றன. அதனால் பலஸ்தீன் மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்த சால்வையை அணிந்து வந்தேன். ☞2

## புலிகள் பற்றிப் பேச சாணக்கியனுக்கு எந்தத் தகுதியும் உரிமையும் இல்லை

### சபையில் கடுமையாகச் சாடிய சாமர சம்பத்

விடுதலைப் புலிகள் அமைப்பு பற்றி பேசுவதற்கு தமிழ் அரசுக் கட்சியின் 9 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரமே உரிமையுண்டு. சாணக்கியனுக்கு அந்த உரிமையுமில்லை; தகுதியுமில்லை. ஏனெனில் அவரது செயற்பாடுகளும் உறவுகளும் சிங்களவர்களுடன் தொடர்புபட்டுள்ளது. இவர் சிங்களப் பெண்ணை மணக்கவுள்ளார்.

இவ்வாறுஇராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்றுஇடம்பெற்ற2024 வரவுசெலவுத்திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள்இ தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தான் ஆற்றிய உரையில் இராசமாணிக்கம் சாணக்கியன் தன்னை ஏனையவர்கள் புலி என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்வார்கள் என்றுதெரிவித்திருந்தார். இதனைச் சுட்டிக்காட்டி உரையாற்றுகையிலேயே சாமர சம்பத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர் மேலும்தெரிவித்ததாவது:

சபையில் பேசிய சாணக்கியன்'நான் ☞8

## சால்வையுடன் சபைக்கு வந்த சஜித்

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச நேற்று நாடாளுமன்றத்திற்கு அரபுச்சால்வைஅணிந்து வந்தார். இஸ்ரேல் - பாலஸ்தீனமோதலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவுதெரிவிப்பதற்காக அவர்அந்தச்சால்வையை அணிந்திருந்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெளிவவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலைவிவாதம் இடம்பெற்றது. இந்த விவாதத்தில் கலந்துகொள்வதற்காக வந்திருந்த எதிர்க் கட்சித் தலைவர் தனது தோளில் கறுப்பு வெள்ளையினாலான அரபுச் சால்வையை அணிந்திருந்தார்.

தான் அவ்வாறு சால்வை அணிந்து வந்ததற்கான காரணத்தையும் சபைக்கு தெளிவுபடுத்தினார்.

அதாவது, நான் இந்த சால்வையை அணிந்து வரும்போது லொபியில் இருந்து வடக்கு மக்கள் பிரதிநிதி ஒருவர் என்னை பார்த்துஇ பலஸ்தீன் மக்களுக்காக மாத்திரமா இதனை அணிகிறீர்கள் என கேட்டார்.

இத்தகைய சால்வை அணிந்தது பாலஸ்தீனமக்களுக்காக மட்டுமல்லாதுஇ உலக அமைதிக்காகவும்தான்.

இனவாதத்தையும் மதவாதத்தையும் எந்த தரப்பினர் அமுல்படுத்தினாலும்அதைநாம் வன்மையாகக் ☞2

## அரசமைப்புப் பேரவைக்குத் தமிழரை நியமிக்காதது தேசிய வாழ்விலிருந்து எம்மை அகற்றும் முயற்சி

### வவுனியாவில் சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

அரசமைப்புப் பேரவையில் வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படும் தமிழர் ஒருவர்கூட இல்லாமல் இருப்பதுஎங்களைதேசிய வாழ்க்கையில் இருந்து வெளியேற்றுவதற்கான ஒரு நடவடிக்கை என தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்று வவுனியாவில் குற்றஞ்சாட்டினார்.

வவுனியாவில் அமைந்துள்ளதமிழரசுக் கட்சி அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட கிளையுடன் நேற்று மாலை இடம்பெற்ற சந்திப்பில்கலந்துகொண்ட அவர்இ அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். அவர்மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் அரசுக் கட்சியின் மாநாடு எதிர்வரும் ஜனவரி மாதம் இறுதியில் நடைபெறவுள்ளது. இந்தத் தடவை இந்த மாவட்டத்தில் இருந்து புதிய தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்படக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. கட்சி யாப்பின் அடிப்படையில் மூன்று பேர் ☞2

## பாலஸ்தீனத்தை ஆதரித்து கொழும்பில் போராட்டம்




இஸ்ரேல் - பாலஸ்தீனப் போரை நிறுத்தி அப்பாவிப் பொதுமக்கள் ☞2

## சுண்டிக்குளத்தை அண்டிய 130 பேர் மீது வன உயிரிகள் திணைக்களம் திடீர் வழக்கு

### தேசிய சரணாலயத்திற்குள் அத்துமீறினர் எனக் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு,கரியல் வயல், சுண்டிக்குளம் பகுதிகளில் தமது விவசாயக்காணிகளைத்துப்புரவு செய்த பிரதேசவாசிகள் 130பேருக்குஎதிராகவன ஜீவராசிகள் திணைக்களத்தினர் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

1908ஆம் ஆண்டு தொடக்கம் அந்தப் பகுதியில் விவசாயத்தில் மக்கள்ஈடுபட்டுவந்தனர். போர் காரணமாக அங்கு விவசாயநடவடிக்கைகள் மந்தமடைந்தன. இதனால் காணிகள் காடு பற்றின.

தற்போது தமது காணிகளைத் துப்புரவு செய்துவிவசாயநடவடிக்கைகளைத் தொடங்கும் நோக்கத்தோடு காணிகளைத் துப்புரவு செய்துவருகின்றனர். ☞8

## அடுத்த வருடம் அரசியலில் புது யுகம்

### இப்படிக் கூறுகின்றார் முன்னாள் அமைச்சர் ரொஷான்

அடுத்த வருடம் அரசியலின் புதிய யுகமாகும். புதியஆற்றல் கொண்ட குழுவினர் அரசியலுக்கு வர வேண்டும். அரசியல் கசப்பானது என கருதிக் கொண்டு இந்த நாட்டை வலுவடைய செய்ய முடியாது.

இவ்வாறுமுன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

முன்னாள் விளையாட்டுத்துறைஅமைச்சர் ரொஷான் ரணசிங்க புதன்கிழமை பிற்பகல் மிஹிந்தலை ரஜமஹா விகாரைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். விகாராதிபதி கலாநிதி வலவாஹெங்குனுவெவே ஸ்ரீ தம்மரதத்ன தேரரிடம் ஆசியைப் பெற்றார்.

ஆசி வழங்கிய பின்னர் அமைச்சருடன் உரையாடிய தேரர்இ கிரிக்கெட்டை பாதுகாப்பதற்காக நீங்கள் செயற்பட்டபோதும் இறுதியில் உங்க ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

இலங்கையில் தமிழர்களுக்கு ஒருதீர்வை வழங்கும் முயற்சியில் ரணிலின்பங்களிப்பைஏற்றுஅவரது முயற்சிகளுக்கு ஆதரவளிக்க அமைப்பு முன்வந்தது. இதற்காக வணபிதா இமானுவேல் இலங்கைக்கு வந்திருந்தார். அரசயில் தலைவர்களையும் சந்தித்துப் பேசினார். இருப்பினும் தீர்வு முயற்சிகளில் கணிசமான முன்னேற்றங்கள் ஏதும் ஏற்பட வில்லை.

இப்போது இந்த அமைப்பினைச் சேர்ந்த குழு ஒன்று மீண்டும் இலங்கைக்கு வந்துள்ளது. அமைப்பின் தற்போதைய தலைவர் சுரேன் சுரேந்திரன் தலைமையில் இந்தக் குழுவினர் இலங்கைக்கு வந்துள்ளனர். குழுவினர் இலங்கைக்கு வந்துள்ளனர். இவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் மகாநாயக்க தேரர்களையும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

நல்லிணக்க செயல்முறைகள் மற்றும்அபிவிருத்தித்திட்டங்களுக்கு உதவும் வகையில் சுரேன் சுரேந்திரன்தலைமையிலானஉலக தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

எதிர்கால அரசியல் நகர்வுகள்இ தீர்வு முயற்சிகள் குறித்து தமிழ்க் கட்சிகளுக்கும் குறிப்பாகத் தமிழ் அரசுக்கட்சிக்கும்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஒரு புதிய இணைப்புப் பாலத்தை ஏற்படுத்துவதில் இந்தப் பயணம் முக்கிய கவனம் செலுத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பில் உலகத் தமிழர் பேரவையினர் ஜனாதிபதி உட்பட முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்துப்பேசவுள்ளனர். அத்துடன் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மஹா நாயக்க தேரர்களையும் சந்தித்துக் கலந்துரையாட உள்ளனர் .சிவில் சமூகத்தினைரையும் சந்திக்க உள்ளனர்.

உலகத் தமிழர் பேரவையினர் வடக்குக்கும் வருகை தரவுள்ளனர்.அரசியல் மற்றும் சிவில் பிரதிநிதிகளைசந்தித்துநல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாட உள்ளனர்.

புலம்பெயர் இலங்கையர்கள் நாட்டின் அபிவிருத்தி திட்டங்களில் பங்களிப்புசெய்யவேண்டும்என்று ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கம் பகிரங்க அழைப்பு விடுத்திருந்தது. குறிப்பாகோட்டாபயராஜபக்ஷவின் ஆட்சியின் போது ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் பின்னர் புலம்பெயர்ந்துவாழும்தமிழர்களை இலங்கையின்உள்ளகஅபிவிருத்தி திட்டங்களுக்குள் உள்வாங்கும் இலக்கினை ஜனாதிபதி ரணில் துரிதப்படுத்தியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் அதற்கானதொரு அலுவலகத்தை ஜனாதிபதிரணில்ஸ்தாபித்துள்ளார். அந்த அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகமாக இலங்கையின் மூத்த இராஜதந்திரிகளின் ஒருவரான வீ.கிருஸ்ணமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். அந்தஅலுவலகத்தின் ஊடாகவே உலக தமிழர் பேரவை ஆட்சியாளர்களை அணுகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் கடந்த முறை வணபிதா இமானுவேல் ரணிலுடன் உறவுகளைப் பலப்படுத்த எடுத்த முயற்சிகள்புலம்பெயர்தமிழர்களால் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தன. அதற்கேற்றார்போல் ரணிலும் தமிழர்களுக்கு எந்தத் தீர்வையம் முன்வைக்கவில்லை. ஏமாற்றம் மட்டுமேஎஞ்சியது. இந்தநிலையில் தீர்வு என்பதிலிருந்து கீழிறங்கி அரசமைப்பின்13ஆவதுதிருத்தத்தை மட்டுமே ஒரு தீர்வாக முன்வைக்க ரணில் முன்வந்த நிலையில் உலகத் தமிழர் பேரவையின் அடுத்த முயற்சிக்கு என்ன நடக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஒருமித்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதாரபாதிப்புக்குமத்தியிலும் பிளவுப்படாத அயலுறவுத்துறைக் கொள்கையை முன்னிலைப்படுத்தி செயற்படுகிறோம். சீனாஇஇந்தியாஇ அமெரிக்காஇ மேற்குலக நாடுகள் உட்பட சகல நாடுளுடனும் இணக்கமாகச் செயற்படுகிறோம். எந்தநாட்டையும்பகைத்துக்கொள்ள வேண்டிய தேவை இல்லை.

கடன்மறுசீரமைப்புவிவகாரத்துக்கு இலங்கையின் பிரதான நிலை நாடுகள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன. பிளவுபடாத அயலுறவுக் கொள்கையினால்தான் இந்த முன்னேற்றத்தை எம்மால் அடைய முடிந்துள்ளது. இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு சீனாஇ இந்தியா உட்படபரிஸ்கிளப்நாடுகள் ஆரம்பத்தில் இருந்து ஒத்துழைப்பு வழங்கியுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் தொகை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் சாத்தியம் காணப்படுகிறது.

அயலுறவுத்துறை அமைச்சுஇ வெளிநாட்டலுவல்கள் அமைச்சுஇ சுற்றுலாத்துறை அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுடன் இணக்கமாக செயற்படுகிறது. வங்குரோத்து நிலைக்கு மத்தியிலும் 1.5 பில்லியன் ரூபா முதலீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பொருளாதார மீட்சிக்காக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட சகல திட்டங்களும் வெற்றிப்பெற்றுள்ளன. கனடா மாத்திரம் இலங்கையின் விவகாரத்தில் எதிர்மறையான நிலைப்பாட்டில் உள்ளது.

பொருளாதார மீட்சிக்காக எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத்துக்கு வெளிப்படைத்தன்மையுடன் குறிப்பிட்டுள்ளார். வெளிநாட்டு அரச தலைவர்களை நேரில் சந்தித்து தமது கொள்கைத் திட்டங்களைத் தெரிவித்துள்ளார். அதன்பயனாகவே சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு வெற்றிப்பெற்றது. அயலுறவுத்துறையின்சேவைகளை டிஜிட்டல் மயப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையுடன் இணக்கமாக செயற்படுகிறோம். நாட்டின் சுயாதீனத்தன்மையை விட்டுக்கொடுத்துச்செயற்படவில்லை. அதேபோல் பிற நாடுகளின் கட்டளைகளுக்கு அமைய நாட்டை நிர்வகிக்க போவதில்லை.தமிழ்இ சிங்களம் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் கௌரவமான முறையில் வாழும் சூழல் காணப்படுகிறது.

தமிழர்களுக்கு அவர்களின் உரிமை வழங்கப்படவேண்டும். எம்மால் இரு முனைகளில் இருந்துக் கொண்டு செயற்பட முடியாது. தமிழர்களுக்கு உரிமை வழங்கப்படும் நிலையில் மறுபுறம் பிரிவினைவாதம் தோற்றம் பெறுவதையும் தடுக்க வேண்டும்.ஒருமித்த நாட்டுக்குள் அனைவருக்கும் சமவுரிமை வழங்கப்படும்.

2020 ஆண்டு நான் நீதியமைச்சராக பதவியேற்ற போது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 400 பேர் இருந்தார்கள். இவர்களை விடுதலை செய்ய முன்னாள் பிரதம நீதியரசர் அசோக் சில்வாவுடன் பேச்சு மேற்கொண்டு சட்டத்தின் ஊடாக 200 பேரை விடுதலை செய்தோம்.

அதேபோல் பயங்கரவாதத்துடன் நேரடியாக தொடர்பில்லாத சம்பவங்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஊடாக கைது செய்ய வேண்டாம் என்ற சுற்றறிக்கையை 2020.09.21ஆம் திகதி வெளியிட்டோம். பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றியமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

## அடுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த வருடம் நிச்சயம் தேர்தல் நடைபெறும். அது ஜனாதிபதித் தேர்தலா அல்லது பொதுத் தேர்தலா என்று சொல்ல முடியாது. ஆனால் அடுத்த ஆண்டு தேர்தல் நிச்சயம் நடக்கும்.

அதற்கு ஏற்ற வகையில் சிறிலங்கா பொது ஜன பெரமுன சரியான திட்டமிட்ட ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இதனிடையேஇ சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமாயின் முதலில் உழைக்கும் மக்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும். அதற்குப் பின்னரே நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்'என்று தெரிவித்தார்.

## அடுத்த வருடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு என்ன நடந்தது? ஆட்சியில் உள்ளவர்களே உங்களுக்கு ஆதரவு வழங்கவில்லையே என்று சுட்டிக்காட்டினார்.

நாட்டில்எங்குபார்த்தாலும்ஊழல் மோசடிகள். வளங்கள் தனியாருக்கு விற்பனை செய்யப்படுகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட இருக்கிறது.

ஊழல்இ மோசடிகள் மற்றும் குடும்ப ஆட்சி காரணமாக நாடு இன்று வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அரச ஊழியர் ஒருவர் 60 வயதில் ஓய்வு பெற வேண்டும் என்றிருந்தால் அரசியல்வாதிகளும் 60 வயதில் ஓய்வு பெற வேண்டும்.

அத்துடன் அவர்களுக்கு இரண்டு தடவைகளுக்கு மேல் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யும் முறைமை நாம் இல்லாது செய்ய வேண்டும் என்று மேலும் தெரிவித்தார்.

அவருக்குப்பதிலளித்தஅமைச்சர் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் உரம் தொடர்பானபிரச்சினைகள்தோற்றம் பெற்ற போது பதவி விலகினேன். கோட்டபாய ராஜபக்ச அரசாங்கம் சக்திமிக்கதாககாணப்பட்டபோதிலும் நான் 4 கடிதங்களை எழுதினேன். உரம் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் பிழை எனவும் அதனை நீக்கி கொள்ள வேண்டும் எனவும் கூறினேன். அவர்கள் அதுதொடர்பில் பொருட்படுத்தாமையே ஆட்சியை இழப்பதற்குக் காரணமாக அமைந்தது.

மேலும் தற்போது நாடாளுமன்றத்தில் இருக்கும் 225 பேரிலும் சரி முன்பிருந்த 225 பேரிலும் சரி இலஞ்சம் பெறாத யாரும் இருக்கவில்லை. இதன் காரணமாகவே இந்த நாட்டில் உள்ள மக்கள் இவ்வாறு துன்பப்படுகிறார்கள். இதுகண்டிப்பாக மாற்றமடைய வேண்டும்.

அடுத்த வருடம் அரசியலின் புதிய யுகமாகும். இதற்கு அறிவான தெளிவான புதிய ஆற்றல் கொண்ட குழுவினர் புதிதாக அரசியலுக்கு வர வேண்டும். இவர்கள் தாம் கற்றுக் கொண்டதை வைத்து நாட்டுக்கு சேவையாற்ற வேண்டும். இவர்கள் இலங்கையில் இருக்க முடியும். அல்லது வெளிநாடுகளிலும் இருக்க முடியும்.

தாம் உழைத்து பொருளாதார ரீதியாகமுன்னேற்றம்அடைந்தவராக இருந்தால் கட்டாயம் நாட்டுக்காக வருகை தருவார்கள். அரசியல் கசப்பானது என கருதிக் கொண்டு இந்த நாட்டை வலுவடைய செய்ய முடியாது - என்றார்.

## அரசமைப்புப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைவர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளார்கள். இந்த மூன்று பேரும் இறுதி வரைக்கும் தலைவர் தெரிவில் இருந்தால் யாப்பின் அடிப்படையில் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் பொதுச்சபை உறுப்பினர்கள் புதிய தலைவரைத் தெரிவு செய்வார்கள். வவுனியா மாவட்டத்தில் இருந்து பொதுச் சபையில் 23 பேர் அங்கம் வகிப்பார்கள்.

வவுனியா மாவட்ட கிளையானது தலைவர் தெரிவில் போட்டியிடுபவர்களை சந்தித்து உரையாட நேரம் கேட்டிருந்தார்கள். அதனடிப்படையில் சந்தித்து உரையாடினேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுபோன்ற சந்திப்புக்கள் நடைபெறுகின்றன - என்றார்.

''ஜனாதிபதி நாடாளுமன்ற கூட்டத் தொடரை நிறைவு கொண்டு வர முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. இதுதொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாடு என்ன'' என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

"நாடாளுமன்றகூட்டத்தொடரை நிறைவுக்கு கொண்டு வர வேண்டிய தேவை கிடையாது. விசேட சந்தப்பத்தில்தான் அது நிகழ வேண்டும். அதற்கான பாரம்பரியம் இருக்கின்றது. ஆகவே தவறானஇ நோக்கத்திற்காக நாடாளுமன்றக் கூட்டத் தொடரை முடிவுறுத்துவது பிழையானது. சில குழுக்களின் தலைவர்களை மாற்றுவதற்காக ஜனாதிபதி முதலில் இவ்வாறு நடந்துள்ளார். அதைச் செவ்வதற்குத்தான் மீண்டும் இவ்வாறு முயற்சிப்பதாக கருதுகிறார்கள். இது பொருத்தமற்ற செயற்பாடுஅதனைநாம்எதிர்ப்போம் - என்றார்.

''அரசமைப்புப் பேரவைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் அவர்களது பெயர் பரிந்துரைக்கப்பட்டபோதும் அதற்கான நியமனம் ஏன் இன்னும் வழங்கப்படவில்லை என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

''சித்தார்த்தன் அவர்களது பெயரை நாம் பரிந்துரைத்த போது எதிர்கட்சியில் இரண்டாவது பெரிய கட்சியாகதமிழ்அரசுக்கட்சிஅதாவது தமிழ் தேசியபக் கூட்டமைப்பு இருந்தது. ஆகவேஇஅவருக்குஅந்த இடம்கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். துரதிஸ்ட வசமாக அரச பக்கத்தில் இருந்த சிலர் எதிர்கட்சி பக்கம் வந்து எதிர்கட்சி உறுப்பினர்களாக அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை எங்களது எண்ணிக்கையைவிட கூடுதலாக உள்ளது. அவர்கள் இந்தச் சந்தர்ப்பம் தங்களுக்கு கொடுக்கப்படவேண்டும் என்று கேட்பதனால் ஒரு முடிவு இல்லாமல் கூட்டம் நிறைவடைந்திருக்கிறது.

சபாநாயகர் இது சம்மந்தமாக தெளிவான முடிவை எடுக்காமல் இருக்கிறார். அந்த பிரதிநிதித்துவம் எங்களுக்குத் தான் என்று சொல்கிறார். ஆனால்இ அதனை இதுவரை செய்யவில்லை. எதிர்கட்சித் தலைவரும் சித்தார்த்தனின் தெரிவுக்கு இணங்கியுள்ளார். மொட்டுக் கட்சியின் பொதுச் செயலாளரும் கூட இணங்கியிருக்கிறார். ஆகையால் நாடாளுமன்றத்தில் இதனை ஒரு தீர்மதானமாகக்கூட நிறைவேற்றலாம். ஆனால் அது நிகழவில்லை.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நான் இது தொடர்பில் பிரஸ்தாபித்தேன். 1972ஆம்ஆண்டு அரசியல் யாப்பு கொண்டு வரப்பட்ட போது ஒரு பேரினவாத சம்பவமாக எங்களை தேசிய வாழ்க்கையில் இருந்து புறக்கணித்து ஒதுக்கி வைத்தார்கள். அது திரும்பவும் நடைபெறுவதற்கான அறிகுறியாக தான் இதனைப் பார்க்கிறேன். அரசமைப்பு பேரவை என்பது முக்கியமானது. அதில் வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் ஒருவர்கூட இல்லாமல் இருப்பது எங்களை தேசிய வாழ்க்கையில் இருந்து வெளியேற்றுவதற்கான ஒரு நடவடிக்கை என கூறியுள்ளோம். இதனை தீர்ப்பதற்கான முயற்சி எடுத்துள்ளார்கள். இது தொடப்பில் வேறு எந்த வித தீர்வுக்கும் நாம் செல்ல மாட்டோம். பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்த வேண்டும் என நாம் நிர்பந்தித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

(100)

## தமிழர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருதரப்பினாலும் அங்கு சிவில் சமூகம்இ சிறுவர்கள்இ பெண்கள் கொல்லப்படுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அதேநேரம் யூதமக்களுக்குஹிட்லர் செய்ததைநாம்மறந்துவிடக்கூடாது.

இரண்டாம் உலகப் போரின் போது யூத சமூகத்திற்கு ஹிட்லர் செய்த அழிவை நாம் அறிவோம். பலஸ்தீன மக்கள் வாழ்ந்த பலஸ்தீனம் துண்டு துண்டாக உடைக்கப்பட்டு ஹிட்லரால் அழிக்கப்பட்ட யூத சமூகத்திற்கு பலஸ்தீனத்தின் ஒரு பகுதி வழங்கப்பட்டது என்பதையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

இது உலகமறிந்த உண்மை. யதார்த்தத்தில்இ பாலஸ்தீனம் காசா பகுதியை மையமாகக் கொண்ட நாடாக இருக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். உருவாகும் பாலஸ்தீன அரசு இஸ்ரேலுடன் போர் புரியாது சகோதரத்துவத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் உலகிற்கு நாம் முன்வைக்கும் நல்லிணக்கம் நம் நாட்டிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்த வருடம் வடக்கு கிழக்கு பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படும் என கடந்த வருடம் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால் அதற்கான தீர்வுகள் இன்னும் கிடைக்கவில்லை. அந்தப் பிரச்சினை சிக்கலானது.

யார் ஆட்சியில் இருந்தாலும் உடனடியாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்றாலும் வடக்குஇ கிழக்கில் வாழும் தமிழ் முஸ்லிம், சிங்கள சமூகங்களும் நாட்டின் ஏனைய பகுதி மக்களும் ஒன்றிணைந்து வாழக்கூடிய ஐக்கிய நாட்டில் இறையாண்மையுள்ள இலங்கையை கட்டியெழுப்புவதற்கு நாம் உழைக்க வேண்டும் என்றார்.

## சால்வையுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டிக்கிறோம்.

உலகத்தின் நிலையான தன்மை உலக அமைதியிலிருந்தே ஏற்படுகின்றது.

நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கு இனவாதம், சாதிவாதம், மதவாதம், மதவெறியை எந்த ஒரு குழு நடைமுறைப்படுத்தினாலும் நாங்கள் அதனை கடுமையாக நிராகரிக்கிறோம்'' என்றார்.

அண்மையில் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் ஆகியோரும் பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவு தெரிவித்து இதுபோன்று சால்வை அணிந்து நாடாளுமன்றத்திற்கு வருகை தந்திருந்தனர்.

## பாலஸ்தீனத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்படுவதைத் தடுக்க வலியுறுத்தி கொழும்பில் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.

சுதந்திர பாலஸ்தீனத்தை ஏற்றுக் கொள்ளுமாறும் போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினர். சுதந்திரத்துக்கான பெண் இயக்கத்தினரால் கொழும்பில் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஐ.நா அலுவலகத்துக்கு முன்பாக நேற்று இந்தக் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# நயினை ஸ்ரீ நாகபூணி அம்மனின் கும்பாபிஷேக பெருவிழா ஆரம்பம்



நயினை ஸ்ரீ நாகபூணி அம்பாளின் கும்பாபிசேக பெருவிழாவிற்கான பந்தற்கால் நாட்டலும் யந்திர பூஜை ஆரம்ப நிகழ்வும் நேற்று (வியாழக்கிழமை) மிகவும் பக்தி பூர்வமாக ஆரம்பமானது. (05)

# பெண்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்து

## வவுனியாவில் பேரணி

பெண்கள்மற்றும்சிறுமிகளுக்குஎதிரானவன்முறைகளைத் தடுக்குமாறு வலியுறுத்தி வவுனியாவில் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பஸ் நிலையப்பகுதியில் நேற்று காலை ஆரம்பமான குறித்த பேரணி கண்டிவீதிவழியாகவைத்தியசாலைசுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து மாவட்டசெயலகம்வரை சென்றடைந்தது.

இதன்போது கருத்து தெரிவித்த பெண்கள், பெண்களுக்கெதிரான வன்முறை இல்லாது ஒழிக்கும் பொருட்டு நவம்பர் 25 முதல் டிசம்பர் 10 வரையான 16 நாள்கள் செயல்வாத விழிப்புணர்வு ஒன்றை நடைமுறைப்படுத்திவருகின்றோம்.

குறிப்பாகஉலகில்அதிகமானவன்முறைகளுக்கு உள்ளாகும் தரப்பாக பெண்களே உள்ளனர். அவர்களுக்கான உதவிகள் கிடைக்கப்பெறாத நிலையில் வீட்டினுள்ளே முடங்கிக்கிடக்கும் நிலை தற்போது காணப்படுகின்றது.

எனவே வன்முறைகளை தடுத்து அனைத்து துறைகளிலும் பெண்களுக்கு முன்னுரிமை கிடைக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக இருக்கின்றது. - இவ்வாறு தெரிவித்துள்ளனர். (05)




# வடிவேல் சுரேஸை வாழ்த்திய ஜீவன்

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டான் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜீவன் தொண்டமான் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் -

மலையக அரசியல்வாதியாக, தொழிற்சங்கவாதியாக செயற்படும் எமது சமூகத்தை சேர்ந்த ஒருவருக்கு ஜனாதிபதியால் இப்படியான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது.

அவரால் முன்னெடுக்கப்படும் பணிகளுக்கு எனது அமைச்சு பக்கத்தில் இருந்து ஏதேனும் ஆதரவு தேவைப்படும் பட்சத்தில், அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.- இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (05)

# இளைஞன் மீது தாக்குதல்: கொடிகாமத்தில் சம்பவம்

இளைஞரொருவர் மீது வன்முறைக் கும்பலொன்று தீவிரமாகத் தாக்குதல் நடத்திய சம்பவம் யாழ். கொடிகாமத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெள்ளம்போக்கட்டி வீதியிலேயே குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த குறித்த இளைஞனை வழிமறித்த வன்முறை கும்பல், இளைஞன் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்நிலையில் மோட்டார் சைக்கிளை வீதியில் விட்டுவிட்டு குறித்த இளைஞர் தப்பியோடியுள்ள நிலையில், இளைஞனின் வீட்டுக்கு சென்ற வன்முறை கும்பல் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து, வீட்டில் இருந்த உடைமைகளை அடித்து உடைத்து சேதப்படுத்திய பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த தாக்குதலில் காயமடைந்த இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், சம்பவம் தொடர்பில் , கொடிகாம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# ரைல்ஸ்களின் விலை வீழ்ச்சி: ஜனாதிபதியிடம் கோரிக்கை



ரைல்ஸ் மற்றும் சுகாதாரப் பொருள்களின் இறக்குமதியை நீக்கியதால், டைல்ஸ் விலை 50 வீதம் குறைந்துள்ளதுடன், டைல்ஸ் தேவையும் அதிகரித்துள்ளதாக, ஹடைல்ஸ் மற்றும் சானிட்டரி பொருள்களின் இறக்குமதியாளர்கள் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் ஜனவரி மாதம் முதல் ரைல்ஸ் மீது வரி விதிக்கப்பட்டால், ரைல்ஸ்களின் விலை 100 வீதம் உயரலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அது மட்டுமல்லாது இது குறித்து ஜனாதிபதி செயலகத்தில் மகஜர் ஒன்றையும் ரைல்ஸ் மற்றும் சுகாதார பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தினர் நேற்றுக் கையளித்துள்ளனர்.

குறித்த மகஜரில் ' ரைல்ஸ்களின் விலை வேகமாக வீழ்ச்சியடைந்து வரும் இவ்வேளையில் வற்வரியை அமுல்படுத்துவதன் மூலம் ரைல்ஸ்களின் விலையை மீண்டும் 100 வீதம் ஆக அதிகரிக்க முடியும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

# குப்பை சேகரிக்கும் வாழிகள் உடுவில் மகளிர் கல்லூரிக்கு

## சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் அன்பளிப்பு



சர்வதேசலயன்ஸ்கழகம்மாவட்டம்306பி1இன்மாவட்டஆளுநர்லயன்பிளஸிடஸ்எம்பீற்றர்அவர்களால் டிசெம்;பர் மாதம் 4 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதி டெங்கு விழிப்புணர்வு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு-வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள ஒவ்வொரு பாடசாலைகளிலும் நடைபெற்று வஜகின்றது.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அஜந்தன் நிகழ்த்தினார்.

அவர்களின் இந்தச் செயற்பாட்டின் மேலும் ஒரு பகுதியாக வலிகாமம் வலயத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு கழிவுகளைத் தரம்பிரித்து இடவதற்கு மூன்று வெள;வேறு வர்;ணங்களைக் கொண்ட குப்பை வாளிகள் வழங்கப்பட்டன.

அதன் முதற்கட்டமதாக உடுவில் மகளிர் கல்லூரியில் கல்லூரி முதல்வர் செல்வி றொசானா மதுரமதி குலேந்திரனிடம் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர் ச.விஜிந்தனின் அனுசரணையில் மூன்று குப்பை வாளிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழக செயலாளர் லயன் சி.ஹரிகரன், பிராந்தியத் தலைவர் லயன் பா.மரியதாஸ், வலயத் தலைவர் லயன் க.டினேஷ், கழக உறுப்பினர் லயன் எஸ்.சசீந்திரராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். (05)

# பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக இலங்கை என்றைக்கும் நிற்கும்

## அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

அரசாங்கம் என்ற ரீதியில் இலங்கை, பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக நிற்கும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கிய அவர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் ஐக்கிய நாடுகள் சபையில் அதே நிலைப்பாட்டை தெளிவாக கூறியுள்ளார் எனக் சுட்டிக்காட்டியிருந்தார். (05)



# மட்டக்களப்பில் திடீர் சுற்றிவளைப்பு: 11 வர்த்தகர்கள் மீது வழக்குத் தாக்கல்



மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட கோட்டைமுனை மற்றும் கல்லடி ஆகிய பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் புதன்கிழமை மாலை திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன் போது மனிதபாவனைக்குஉதவாதஉணவுப் பொருள்களை விற்பனை செய்த 11 வர்த்தகர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# நம்பிக்கையீனம்

அடுத்த வருடத்தில் தேர்தல் நெருங்கிவரும் நிலையில்நாடாளுமன்றத்தில்நேற்றுத்திடீரென்று ஒருமித்தநாட்டுக்குளுஅனைவருக்கும்சமவுரிமை என்கிற தீர்வு தொடர்பான குரல் ஒலித்துள்ளது. அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரிதான் இதனைக் கூறியிருப்பவர்.

அயலுறவுத்துறைஅமைச்சுக்கானநிதிஒதுக்கீடு தொடர்பில் நடந்த விவாதத்தில் உரையாற்றிய அவர்இ இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

அரசுத் தலைவராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதும் 2023 மாசி 4இ சுதந்திர தினத்திற்குள் தீர்வு என்று முதலில் சொன்னார். அதன் பின்னர் இந்த ஆண்டின் இறுதிக்குள் தீர்வு என்றார். பின்னர் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைமுழுமையாகநடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் அனைத்துக் கட்சிக் கூட்டங்களையும் நடத்தினார். ஆனால்இ தீர்வு நோக்கிஒரு அடிகூட எடுத்து வைக்கப்படவில்லை.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகூட கிஞ்சித்தும் முன்னேறவில்லை. அதனால் இப்போது ஒருமித்த நாடுக்குள் அனைவருக்கும் சம உரிமை என்கிற அயலுறவுத்துறை அமைச்சரின் கருத்தையும் நம்ப முடியவில்லை.


ஒருமித்தநாட்டுக்குள்தீர்வுஎன்பது2015ரணில் ஆட்சியில் முன்வைக்கப்பட்ட புதிய அரசமைப்பு யோசனைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த ஒரு விடயம். நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்த அரசியல கட்சிகள் அனைத்தின் பிரதிநிதிகளையும் கொண்ட சபையில் இந்த அரசமைப்பு யோசனைகள் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டிருந்தன.

ஆனால் இறுதியில் அவை நடைமுறைப்படவில்லை. வழக்கமான சிங்களஇ பௌத்தபேரினவாதக்கூச்சல்களுக்குஅடிபணிந்த ஆட்சியாளர்கள் அந்த யோசனையைக் குப்பைக்குள் வீசப்பட்டன. அதன் பின்னர் அது குறித்து ரணிலேகூடப் பேசியதில்லை. ஒருமித்த நாடு என்று தமிழில் குறிப்பிடப்பட்டாலும் அதன் சிங்களப் பதம் ஒற்றையட்சியையே குறிக்கின்றது என்று தமிழர்கள் தரப்பில் அப்போதே சர்ச்சைகளும் எழுந்திருந்தன.

அப்படிப்பட்டதொருநிலையில்அயலுறவுத்துறை அமைச்சர் திடீரென இந்த ஒருமித்த நாட்டுக்குள் அனைவருக்கும் சம உரிமை என்கிறார். இதுவும் நடக்கக்கூடிய விடயமா என்கிற சந்தேகம் எழுவதைத்தடுக்கமுடியவில்லை. காலங்காலமாக தேர்தல்களின்போதுதீர்வுகுறித்துதமிழர்களுக்கு வாக்குறுதிகளைவழங்குவதும்பின்னர்அதனை மீறுவதும் சிங்களத் தலைவர்கள் தொடர்ந்து செய்துவதுதான் என்பதால்இ இந்த ஒருமித்த நாடு அறிவிப்பும் அத்தகையதொன்றோ என்கிற எண்ணத்தையும் தவிர்க்க முடியாது.

தீர்வு முயற்சிகளும் அறிவிப்புக்களும் ஏமாற்று வித்தைகளாக இருக்கக்கூடாது என்றுதான் தமிழர்கள் விரும்புகின்றார்கள். ஆனால் ஆட்சியாளர்கள் மீண்டும் மீண்டும் அதனையே செய்துவரும் நிலையில் ஆட்சியாளர்களின் எந்தவொரு அறிவிப்புக் குறித்தும் தமிழர்கள் நம்பிக்கையிழந்திருக்கிறார்கள் என்பதே உண்மை.

# உரசிப் பார்க்கும் உறவு



**என் சத்திய மூர்த்தி**

அண்மையில் வட மாகாணத்திற்கு வருகைதந்த இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, இடமாற்றம் காரணமாக ஆஸ்திரேலியா செல்ல இருக்கிறார். அவருடைய இடத்தில் தற்போது பெல்ஜியம் நாட்டில் இந்திய தூதுவராக உள்ள சந்தோஷ் ஜா பொறுப்பேற்க இருக்கிறார்.

சந்தோஷ் ஜா, இலங்கைக்கும் தமிழர் தரப்பிற்கும் புதியவர் அல்லர். இனப்போரின் உச்சகட்ட காலத்திலும் அதனை



தொடர்ந்த காலகட்டத்திலும் 2007 முதல் 2010 வரை, தலைநகர் கொழும்புவில் இந்திய தூதரகத்தில், அவர் உயரதிகாரியாக பணியாற்றி உள்ளார். அவரைப் பொறுத்த வரையில், புதிதாக இந்திய தூதுவர் பணி என்பது விட்ட இடத்தில் இருந்து தொடருவதுதான். புதிதாகத் தொடங்குவது அல்ல.

சந்தோஷ் ஜா அன்று விட்டுச்சென்றஇலங்கைஅல்லஇன்று உள்ளது. தலைநகர் கொழும்பில் பொருளாதாரப் பிரச்சினையே அரசின் முக்கிய பேசுபொருள்.

குறிப்பாக, கடந்த ஆண்டின் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நாடு மூச்சுவிட, இந்தியாதான் உதவியது. என்றாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பல்வேறு முன்னெடுப்புகள் குறித்த கவலைகள்,இந்தியாவிற்குஇருக்கிறது என்பதே உண்மை.

இதில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை. ஒன்று, இனப்பிரச்சினை. இரண்டு, இலங்கையில் சீனாவின் பல்முக ஊடுருவல். அதன் ஒரு பகுதியாக சீனத் தூதுவர் குயி ன்ஹாங்கும் தூதராலயமும், வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர் பகுதிகளுக்கு அடுத்தடுத்துப் படையெடுப்பது மற்றும் அதன் தாக்கம்.

## பிரியா விடை

இந்தப் பின்னணியில், வட மாகாணத்திற்கான, இந்தியா மற்றும் சீன தூதுவர்களின் அண்மைக் காலப் பயணங்கள் குறிப்பிடத்தக்கது. இதில், இந்தியாவின் கோபால் பாக்லே, வட மாகாண மக்களிடமிருந்து பிரியா விடை பெற்றுச் செல்வதற்காக வந்திருந்தார். சீன தூதுவரோ, தமிழ் மக்களை வலைவீசிப் பிடிக்க வந்திருந்தார்.

இது போன்றே, சீன தூதுவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரும் வட மாகாணத்திற்கு வந்திருந்தார். அப்போது அவர், நல்லூர் கோவிலுக்கு சென்று அலப்பறை காட்டினார். போதாதற்கு, இலங்கை கடற்படைப் படகில், இந்திய -இலங்கைக் கடல் எல்லை வரை பயணம் செய்து, இந்தியாவைச் சீண்டிப் பார்த்தார்.

இது தவிர, வழமையாக தமிழர் பகுதிகளுக்குப் பயணம் செய்யும் இந்தியத் தூதுவர்கள் போலவே, சீனத் தூதுவரும், மக்களுக்கு நலன்புரி பொதிகளையும் வழங்கினார்.

கடந்த முறை இந்தப் பொதிகள், சீன அரசின் அன்பளிப்பு என்று கூறிய தூதுவர், இந்த முறை. அவை சீனாவில் உள்ள புத்த மத அமைப்புகளின் அன்பளிப்பு என்று விளக்கம் அளித்தார்.

இதன் மூலம் இலங்கையில், தமிழர்களுக்கும் பௌத்தர்களுக்கும் ஏழாம் பொருத்தம் என்ற உண்மையை அவர் இன்னமும் புரிந்துகொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகியது. அதிலும் குறிப்பாக, கடந்த இரண்டு-மூன்று ஆண்டுகளாக, தமிழர் பகுதிகளில், கலாசார சின்னங்களை அழித்தொழிக்கும் முன்னெடுப்புகளில் பௌத்த பிக்குகளே முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்பதைக்கூடச் சீன தூதுவர் அறிந்து வைத்திருக்கவில்லை.

## தொப்புள்கொடி உறவு

இந்தியாவில் வாழும் தமிழ்ச் சொந்தங்கள் மட்டுமல்ல, இந்தியா என்ற நாட்டுடனும்இலங்கைவாழ்தமிழ் பேசும் மக்கள் அனைவருமே தொப்புள் கொடி உறவுடனேயே பழகுகின்றனர். இனப்பிரச்சினை உள்ளிட்ட சில பிரச்சினைகள் குறித்துக் கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். அவை, இரு தரப்பாராலும் பேசி, அலசி, நல்ல முடிவுகளை நோக்கியே நகர்ந்து வந்திருக்கிறது.

இந்தியா உடனான இலங்கைத் தமிழர் உறவு என்பது ஒரு குடும்பத்தினரிடையே உள்ள கொடுக்கல்-வாங்கல்களுக்குச் சமம். ஒருவித ஏற்ற- இறக்கம் அவ்வப்போது தோன்றி மறையும். அதே மக்களின் சீனாவுடனான உறவு அத்தகையது அல்ல. இன்னும் சொல்லப்போனால், சீனத் தூதுவர் மற்றும் தூதராலயம் இங்குள்ள தமிழ் மக்களை தனது இந்தியா மற்றும் புவிசார் அரசியல் விளையாட்டில் ஒரு பகடைக் காயாக மட்டுமே பயன்படுத்த நினைக்கிறது.

அந்த விதத்தில் 2021ஆம் ஆண்டில், தனது முதல் வட மாகாணப் பயணத்தின் போதே, சீனத் தூதுவர், இந்தியக் கடல் எல்லை வரை படகில் சென்று வந்தது, அவர் தமிழ் மக்களைக் கண்டுகளிக்க வரவில்லை என்ற உண்மையைப் பறைசாற்றியது. அது போலவே, நல்லூர் முருகனை அவர் தரிசிக்க சென்றதுகூட, தமிழ் மக்களைத் தவறாக எடைபோட்டு, அவர் அரங்கேற்றிய கீழ் தர அரசியல் மட்டுமே என்பதையும் புலனாக்கியது.

## பொழுதுபோக்கு

அந்த வகையில், இந்தியாவுடனான உறவில் உரிமை கோரும் தமிழ் மக்கள், சீனா தொடர்ந்து வீசும் வலையில் விழுந்து விடமாட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரையில், இந்தியாதான் அந்த உறவு. சீனா வெறும் பொழுதுபோக்கு. அந்தப் பொழுதுபோக்குக் காலத்தில், கொறிப்பதற்கு, உதவி பொதிகள் என்று அவர்களின் தூதுவர் கொடுத்தால், கசக்குமா, என்ன?

இந்தியாவைக் குறித்து இங்குள்ள தமிழர்களின் எண்ணவோட்டமே அலாதியானது. இது இந்தியாவின் பிற அண்டை நாடுகளான நேபாளம், பங்களாதேஷ் போன்ற மக்களின் இந்தியா குறித்த எதிர்பார்ப்புகளைப் போன்றது அல்ல. இது தொப்புள்கொடி உறவு என்ற உண்மை உறைக்கும் போது, இந்தியாவிடம் இருந்தான தமிழர் தரப்பின் எதிர்பார்ப்புகளுக்குரிய அர்த்தம் புரியும்.

இன்னும் சொல்லப்போனால், சாதாரண மக்கள் தொடங்கி, அரசியல் சாணக்கியர்கள் வரையிலான தமிழ் தரப்பினர் இந்தியாவுடன், உரிமையுடன் சண்டைபிடிக்கிறார்கள். இந்திய அரசியல் தலைமைகள், ஏன், இந்திய அமைதி படையினரையும் குறைகூறும் மக்களே, இன்னமும் இந்தியா தங்களது உதவிக்கு வரும் என்று எதிர் பார்க்கிறார்கள். வரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறார்கள்.

## தனித்துவம் வாய்ந்தது

இந்தியாவுடனான தமிழர் தரப்பின் உறவு தனித்துவம் வாய்ந்தது. பச்சையாகச் சொல்லப்போனால். இந்தியாவில் இருந்து இங்கு வந்து தேயிலைத் தோட்டங்களில் தலைமு-றைகளாகப் பணி செய்துவரும் மலையகத் தமிழர்களைவிட, வடக்கு -கிழக்குத் தமிழர்கள் அந்த நாட்டை அன்னியமாகவே கருதவில்லை. அண்டை வீடு என்பது போல், அண்டை நாடாகவே அவர்களுக்கு இந்தியா இருந்து வருகிறது.

ஏன், இந்தியாவை அவ்வப்போது சாடும்தமிழர்களுக்குக்கூட, அது தங்களது எதிர்பார்ப்பு மற்றும் ஆதங்கத்தின் வெளிப்பாடு என்பதனை உணர அதிக காலம் தேவைபடுவதில்லை. அவர்களில் பலரும்கூட. அரசியல் காரணங்களுக்காக, இலங்கையில் தமிழர் தரப்பும் ஆதிகாலம் தொட்டு வாழ்ந்து வருவதை உறுதிப்படுத்துவார்கள். ஆனால், அவர்கள்கூட அவ்வப்போது, தமிழர்களுக்கும் தமிழ் நாட்டிற்கும்கூடப் பண்டைக்காலம் தொடங்கி ஒட்டும் உறவும் இருந்து வந்திருக்கிறது என்பதை அடித்துக் கூறி அதற்கான சான்றுகளையும் முன் வைப்பார்கள்.

இரு வேறு நாடுகள் என்று ஆன பிறகும் இங்குள்ள தமிழர்களின் இந்தியாவிற்கான பிரியம் எள்ளளவும் குறையவில்லை. உண்மையில், பாகிஸ்தான், வங்காளதேசம் போன்ற நாடுகளை போல் இல்லாமல், இலங்கை என்ற நாடோ, குறிப்பாக இங்குள்ள தமிழர்களோ, இந்தியாவின் ஒரு பகுதியாக என்றுமே இருந்ததில்லை.

ஏதோ ஒரு காலத்தில், இரு நாடுகளும் லெமூரியா கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தன என்று வேண்டுமானால் கூறிக்கொள்ளலாம். பின்னர் அவை இயற்கைக் காரணங்களால் பிரிந்தன. பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பகுதிகளில் மக்கள் வசித்தனரா என்பது தெரியாத விடயம். புரியாத புதிர்.

சிங்கள- பௌத்தர்களின் மஹாவம்சம் என்ற நூல் படி பார்த்தால், முதலில் விஜயன், பின்னர் அசோக சக்கிரவர்த்தியின் மகன் மற்றும் மகளான மஹிந்தா மற்றும்

(5ஆம் பக்கம் பார்க்க...)

# பொத்துவில் மதுபானசாலைக்கு எதிராகக் குரல் எழுப்பிய ரிஷாத்



'பொத்துவில்லில் அமைக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு அனுமதி வழங்காமல் அரசு நிறுத்த வேண்டும்' என அகில இலங்கை மக்கள்காங்கிரஸ்தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினரான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொத்துவில் நகரில் மதுபான விற்பனை நிலையம் திறக் கப்படுவதை தடுத்து நிறுத்துமாறு கோரி அங்கிருக்கும் பொது அமைப்புக்கள் எங்களுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்கள்.

அங்கு மதுபானசாலை அமைக்கப்படவுள்ளமையை நான்வன்மையாகக் கண்டிக்கின்றேன். குறித்த மதுபான சாலை அமையவுள்ளஇடத்திலிருந்து 200மீற்றருக்குட்பட்ட பிரதேசத்தில் பாடசாலைகள், பௌத்த விகாரை, கோயில், தேவாலயம், ஜும்மா பள்ளிவாசல், வைத்தியசாலை, நீதிமன்றம், பாலர் பாடசாலை என்பன அமைந்துள்ளன.

அங்கு மதுபானசாலை அமைந்தால் நாட்டின் இன்றைய பொருளாதார நிலையில் மக்கள் மதுபானத்திற்கும் நிறைய பணத்தை ஒதுக்கி சீரழிவார்கள். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# 4ஆம் நாள் டெங்கு விழிப்புணர்வு

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி1 இன் மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றர் அவர்களால் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதி டெங்குவிழிப்புணர்வுவாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் அதன் நான்காம் நாளான இன்று(வியாழக்கிழமை) மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவர்களுக்கு டெங்குநோயிலிருந்து எம்மை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அஜந்தன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் மாவட்ட ஆளுநரின் ஆலோசகரும் சுன்னாகம் லயன்ஸ் கழக செயலாளருமான லயன் சி.ஹரிகரன், சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்களான பிராந்திய தலைவர் லயன் பா.மரியதாஸ், வலயத் தலைவர் லயன் க.டினேஸ், மாவட்டத் தலைவர் லயன் தே.அகிலன், கழக உறுப்பினர் விஜிந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த திங்கட்கிழமை சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயத்திலும், செவ்வாய்க்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியிலும் புதன்கிழமை உடுவில் மகளிர் கல்லூரியிலும் இந்த நிகழ்வு நடைபெற்றது. நாளை (வெள்ளிக்கிழமை) கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயத்திலும் நடத்தவும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (05)

# உரசிப்பார்க்கும்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சங்கமித்திரை ஆகியோர் இங்கு புத்த மதத்தை பரப்ப வந்தனர் என்று கூறலாம். ஆனால், விஜயன் இந்தியாவில், அதுவும் குறிப்பாக தமிழ் நாட்டில் இருந்து பாண்டிய நாட்டு இளவரசி ஒருவரை மணம் செய்து கொண்டதாகவும் கூறப்படுகிறது.

சரித்திர ரீதியாக இராஜராஜ சோழன் மற்றும் இராஜேந்திர சோழன் காலத்தில் தொடங்கியே இருநாடு உறவுகள் குறித்த சரித்திர குறிப்புகள் தெளிவாக இருக்கின்றன. அதாவது சுமார் 1200 ஆண்டு காலத்தில் தொடங்கி மட்டுமே இரு நாட்டு உறவுகள் குறித்து அறிந்து கொள்ள முடிகிறது. என்றாலும், அந்தக் காலத்திற்கு முந்தைய பகுதியிலும், இங்குள்ள சைவத் தலங்களுக்கு தமிழ் நாட்டில் இருந்து சைவ குரவலர்கள் வந்து தரிசனம் செய்து, பாடல்கள் புனைந்துள்ளனர் என்பதும் உண்மையே.

எது எப்படியோ, தற்போது இரு நாட்டு உறவுகளை உரசி பார்க்கும் மீனவர் மற்றும் கச்சதீவு பிரச்சினைகளில்கூட இரு நாடுகளும் ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்தபோது, இரு தனி அரசுகளாகவே பேசிவந்துள்ளன. ஒப்பந்தங்கள் செய்து வந்துள்ளன. அந்த வகையில், இங்குள்ள தமிழர்களின் இந்தியா மீதான பற்றும். உறவும் நம்பிக்கையும் அலாதியானது.

**புதிய மாற்றங்கள்**

இந்தப் பின்னணியில், புதிய இந்திய தூதுவராக சந்தோஷ் ஜா பதவி ஏற்க இருக்கும் இந்தக் காலகட்டத்தில், புது டெல்லியிலும் இலங்கையின் அடுத்த தூதுவராக ஷேனுகா செனவிரத்னே பொறுப்பேற்றுள்ளார். முன்னர், கொழும்பில் அயலுறவுத் துறைச் செயலாளராக இருந்த அவர், அண்மை காலத்தில், இலங்கையின் தூதுவர் மற்றும் நிரந்தர பிரதிநிதியாக பணியாற்றி வந்தார்.

இந்தப் புதிய மாற்றங்களின் பின்னணியில், இரு நாட்டு உறவுகளும் அடுத்தடுத்த கட்டங்களுக்கு முன்னேறலாம். இதற்கு முன்னர் புது டெல்லியில் இலங்கைத் தூதுவராக இருந்த முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொடா, நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை காலத்தில் சிறப்பாக பணியாற்றினார் என்ற எண்ணம் உள்ளது.

அந்த வகையில், புதிய தூதுவர்களின் பணிகள், இரு நாட்டு பொருளாதார உறவுகளுடன் இனப்பிரச்சினை மற்றும் சீனா குறித்த இந்தியாவின் கவலைகளைச் சுற்றியே இருக்கும். அதில், தமிழர்களின் பங்களிப்பும், பயன்பெறுதலும்கூட அவர்களுக்கு அமைய இருக்கும் தலைமைத்துவத்தையும் பொறுத்தே இருக்கும். காரணம். இந்தியாவின் புதிய தூதுவரான சந்தோஷ் ஜா, விட்டுச்சென்ற இடத்தில், இலங்கை அரசோ, பொருளாதாரமோ, இனப்பிரச்சினையோ, அதில் தமிழர் தலைமைகளின் ஆளுமைகளோ இப்போது இல்லை.

மாறாக, எங்கே தமிழர்கள், என்னவாயிற்று தமிழர் தலைமைகளுக்கு? என்ற நிலையே இப்போது இருக்கிறது. இது மாற வேண்டும். மாற்றப்பட வேண்டும். அதுவும் உடனடியாக. இல்லை என்றால், இந்தியா அல்ல, ஆண்டவனே வந்தாலும், தமிழர்களுக்கு விடிவுகாலம் பிறக்க வாய்ப்பில்லை!




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 390/=
Chiken Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலய வருடாந்த மஹோற்சவம் தொடக்கம்







'ஈழத்து சபரிமலை' என அழைக்கப்படும் யாழ். கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. அந்தவகையில் தொடர்ந்து பத்து தினங்கள் இந்த ஆலய மஹோற்சவம் காலை, மாலை உற்சவங்களாக நடைபெறவுள்ளன.

இதனையடுத்து எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை இரவு 07 மணிக்கு சப்பரத் திருவிழாவும், 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், அன்றைய தினம் இரவு 07 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## சுண்டிக்குளத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அந்தப் பகுதி வனத் திணைக்களத்திற்குரியது என்றுகூறும் வனஉயிரிகள் திணைக்களஅதிகாரிகள்இதுப்புரவுப் பணியில் ஈடுபட்ட மக்களுக்கு எதிராகமுல்லைத்தீவுநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

சுண்டிக்குளம் தேசியா பூங்காவுக்குள் உட்சென்றமைஇ தாவரங்களை வெட்டி வெளியாக்கியமைஇ காணிகளை வெளியாக்கியமைஇ பாதைகளை அமைத்தமை மற்றும் பாதைகளை பயன்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இவ்வழக்கானது நேற்று முல்லைத்தீவு நீதிமன்றில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது. பிரதிவாதிகள் சார்பில் மன்றில் முற்பட்டிருந்த சட்டத்தரணி சி.தனஞ்சயன் இந்த வழக்குத் தொடர்பில் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்திலே சுண்டிக்குளம் பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு எதிராக வனஉயிரிகள் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. கிட்டதட்ட 130 நபர்களுக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

அதில்இ அப்பிரதேசவாசிகள் அத்துமீறிக்குடியிருந்தனர்எனவும்இ தாவரங்களை அழித்தனர் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

சுண்டிக்குள பிரதேசத்தில் இருந்து 6 கிலோ மீற்றர் தூர தொலைவில் இருக்கும் மக்களுக்கு எதிராகவும்இ இறந்த மக்களுக்கு எதிராகவும்இ ஒரு நபருக்கு எதிராக மூன்றுஇ நான்கு வழக்குகள் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சரியான வரைபடங்களோஇ எந்த காலப்பகுதியில் அப்பகுதி சரணாலயமாக இருந்தது என்பதற்கான எந்த வித தகவல்களோ இல்லாத நிலையில் போலியான விசாரணையை நடத்தி வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் நில அளவை திணைக்களத்தினர் இந்த வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

இவ்வழக்கானது அடிப்படை ஏதுகள் அற்ற நிலையில் கொண்டுவரப்பட்டுள்ளதையும்இ மக்களின் நில உரிமையினை பறிக்கும் அரசியல் நோக்கத்துக்காகவே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கலாம்என்பதையும் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தோம்.

மேலும்இ வழக்கு தொடுநர் தரப்பு மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என நீதிவான் பணித்துள்ளார். இந்நிலையில்இ இவ்வழக்கு அடுத்த வருடம் மே மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிக்கின்றது.

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏதாவது கூறினால் என்னை புலி என்று கூறுவீர்கள் ’என்று குறிப்பிட்டார். அவருக்கும் புலிகளுக்கும் எந்த வித தொடர்பும் கிடையாது.

மஹிந்த ராஜபக் ஷ ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவராக இருந்தபோது அவரிடம் போய் அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராகப் பதவி பெற்றார். ராஜபக்ஷக்களுடன்ஒன்றிணைந்து செயற்பட்டார்.

அதுமட்டுமல்லஇவர்கண்டியில் உள்ளசிங்களப்பாடசாலையில்தான் கல்விகற்றார். சிங்களவீடுகளில்தான் உணவருந்தினார். சிங்களப் பெண்கள்தான் அவரின் தோழிகள். அவர் ஒரு சிங்களப் பெண்ணைத்தான் திருமணமும் செய்யவுள்ளார். எனவேஇ இவர் தன்னைப்புலி என்று கூறமுடியாது. தமிழ் அரசுக் கட்சியின் ஏனைய ஒன்பதுஉறுப்பினர்களுக்குமட்டுமே புலிகள் பற்றி பேச உரிமையுண்டு. ஏனெனில்இ அவர்கள் புலிகளுடன் இருந்தவர்கள்இ வாழ்ந்தார்கள். ஆனால்சாணக்கியனுக்குதன்னை புலி என்று கூற எந்தத் தகுதியும் உரிமையும் கிடையாது - என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir




## குணமுடையனாயிருந்து குற்றங்கள் தீர்க்கும்

# கணபதியே எமக்கு காப்பு





ஈழ வள நாட்டுச் சைவர்கள் பன்னெடுங் காலமாக பக்தியோடு அனுசரிக்கும் விரதங்களில் பிள்ளையார் பெருங்கதை நோன்பு என்ற விநாயக விரதமும் முக்கியமான ஒன்றாகும்.

கார்த்திகை மாத திருக்கார்த்திகை பௌர்ணமி கழிந்த மறுநாள் தொடங்கி அடுத்து வரும் வளர்பிறை சஷ்டி ஈறாக இருபத்தொரு தினங்கள் இந்த நோன்பு நோற்கப்படுகிறது.

பார்க்கவ புராணம் என்ற விநாயகர் புராணத்தில் சிறப்பித்துப் பேசப்படும் இந்த விரதம் விநாயகப்பெருமானுக்கான சிறப்பு மிக்க விரதங்களில் முதன்மை பெறுகிறது.

நட்சத்திரம், திதி என்ற இரு வகை கணிப்பிலும் சிறப்புற்ற இந்த விநாயக விரதம் கார்த்திகை கார்த்திகை பூரணை கழிந்த பின்னாளில் தொடங்கி சதயம் தொட்ட சஷ்டி நன்நாளில் நிறைவு பெறுகிறது. தற்கால தமிழகத்தில் பெரிதும் அறியப்படாததான இந்த விரதம் அங்கு நாட்டுக் கோட்டை நகரத்தாராலேயே சிறப்பாக பேணப் படுகிறது.

ஆயினும், இலங்கையில் இவ்விரதம் பன்னெடுங்காலமாக பக்தியோடு பேணப் படுகிறது.

புராணங்களில் இவ்விரதத்தை அனு சரித்து கண்ணனும், பாண்டவரும், கந்தனும், இலக்கண சுந்தரியும் இன்னும் பலரும் வேண்டியன வேண்டியாங்கு எய்தினர் என்று சொல்லப்படுகிறது.

இருபத்தொரு தினங்கள் (மூன்று வாரங் கள்) அனுசரிக்கப்படும் இவ்விரத காலத்தில் யாழ்ப்பாணத்து சுன் னாகம் வரத பண்டிதர் எழுதிய பிள்ளையார் கதை படிக்கப்படுவது வழக்கம்.

எப்படி இந்த விரதம் ஈழத்தில் தனிச்சிறப் புடன் காணப்படுகிறதோ அது போல இக் கதையும் தனிச் சிறப்புடையது.

இலக்கியச்சுவையும் சுருங்கச் சொல்லும் பாங்கும் இசையோடு பாடத்தக்க அமைப்பும் எளிய தமிழும் பக்திப்பெருக்கும் மிக்க இந்தப் பிள்ளையார் கதை இந்த இருபத்தொரு தினங் களும் அடியார்களால் மிகுந்த பக்தியோடு படிக்கப்படுகிறது.

இந்த இலக்கியத்தை எழுதிய வரத பண்டிதரின் முழுப்பெயர் அரங்கநாத பண்டிதர் வரதபண்டிதர் என்பதாகும். ஒல்லாந்தர் காலத்தில் சுன்னாகத்தில் வாழ்ந்த இவரை அந்தண மரபில் ஸ்ரீ வத்ஸ கோத்திரத்தில் தோன்றியவர் என்பர். இந்த வரத பண்டிதரால் இயற்றப்பட்ட ஏகாதசிப்புராணம், சிவராத்திரி புராணம் முதலியவும் சிறப்புடையன. இந்த விநாயக விரத காலத்தில் குறித்த பிள்ளையார் கதை மட்டுமன்றி, வடமராட்சிப்பகுதியில் பிள்ளையார் புராணம் என்ற சிற்றிலக்கியமும் படனம் செய்யப்படுகிறது. இதை எழுதியவர் பெயர் அறிய இயலாதுள்ளது.

குறித்த பிள்ளையார் கதையும் பிள்ளையார் புராணமும் சொல்லும் செய்திகள் பெரும்பாலும் ஒன்றாகவே அமைந்துள்ளன. பிள்ளையார் குணம் கொண்டு குற்றங்கள் தீர்ப்பவர். (குணமுடைய னாயிருந்து குற்றங்கள் தீர்க்கும் கணபதி) அதனை இந்நூல்கள் குறிப்பிட்டு விநாயகரிடம் எம்மை ஆற்றுப்படுத்துகின்றன.

பிள்ளையார் பெருங்கதை என்ற இவ் விரத காலத்தில் ஈழத்துப் பிள்ளையார் ஆலயங்களில் கணபதி சஹஸ்ரநாம அர்ச் சனை சிறப்புடையது.

இந்த ஆயிரம் நாமங்களால் தினமும் ஐந்து அர்ச்சகர்கள் அர்ச்சிப்பதையும் அதன் வழி இருபத்தொரு நாளில் லக்ஷ நாம அர்ச்சனை நிகழ்வதையும் பல இடங்களில் அவதானிக்கலாம்.

வட மொழிப்புராணங்களிலிருந்து பெறப்பட்ட இந்த சஹஸ்ரநாம ஸ்தோத்திரம் எண் வரிசையில் (ஒன்று முதல் கோடி, அநந்தம் என்று) கணபதியின் பெருமைகளை விரிவாகச் சொல்லிப் போற்றுகிறது.

இதனை விடவும், இவ்விரத நிறைவு நாளில் பல்வேறு கோயில்களிலும் கஜமுக சம்ஹார நிகழ்ச்சியும் இடம் பெறுவது ஈழநாட்டு வழக்கமாகும்.

கந்தபுராணத்தை அடியொற்றி நிகழும் இந்த வைபவத்துடன் சதயம் தொட்ட சஷ்டி நல்விரதம் நிறைவு பெறும்.

இலங்கையில் கருவறையில் விநாயகரே காட்சிதரும் பலநூற்றுக்கணக்கான விநாயகர் ஆலயங்கள் உள்ளன.

யாழ்ப்பாணத்தரசர்கள் அமைந்த பழைமையான பிள்ளையார் ஆலயங்கள், சோழ இளவரசியான மாருதப்புரவீகவல்லி ஸ்தாபித்த கணபதி கோயில்கள் என்றும் பலவற்றை யாழகத்தில் நாம் தரிசிக்கலாம்.

பிள்ளையாரே கர்ப்பகிரஹத்தில் காட்சிதரும் பேராலயங்களான இவை கூட, ஈழத் தின் தனிச்சிறப்பே ஆகும்.

வழிபடும் அவர் இடர்கடிந்து அருளும் விக்ன விநாயக வள்ளலை ஏத்துவோம். திருவருள் பெறுவோம்.

**சிவஸ்ரீ. தி. மயூரகிரி சிவாச்சார்யார்**

# மெய்ப்பொருள் காண்பதறிவு



இந்த உலகம் பொருள்களால் ஆயது. பொருள்கள் தம்முள் வேறுபட்ட தனித்தன்மைகள் உடையன.

சில பொருள்கள் வேறுபட்டு விளங்கினாலும் பிறிதொரு பொருளுடன் ஒன்றும் இயல்புடையன. சிலதனித்தன்மை பெற்றே விளங்குவன. மாந்தர் வாழ்க்கை பொருள்களுடன் தொடர்புடையது வாழ்வின் துறைதோறும் வாழ்வு முழுவதும் பொருள்களுடன் யாதானும் ஒரு உறவு இல்லாமால் வாழ்க்கை அமைவதில்லை; அமையாது; அமைதல் முடியாது. அதனால் தான் திருக்குறள், 'பொருளில் லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றது.

பொருள்களால் ஆயது வாழ்க்கை. இந்தப் பொருள்களை பொருளின் தன்மைகளை உள்ளவாறறிந்து அப்பொருள் தன்மைக்கு ஏற்பவும் வாழ்க்கைக்குரிய வகையிலும் பயன்படுத்த அறிந்து கொள்ள வேண்டும்.

பொருள்களின் தன்மையறிதலுக்குத் தனித்திறனும் பயிற்சியும், அறிவும் வேண்டும். பல பொருள்கள் தோற்றமான நிலையிலேயே தொடர்ந்து


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போது Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

காலைக்கதிர் Kalaikkathir

# பழி வாங்குவதற்காகவே தெல்லிப்பழை தாக்குதல்



கடந்த 06 மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்திற்கு பழிவாங்கும் விதமாகவே தெல்லிப்பழைத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழில் உள்ள இரு வன்முறை கும்பல்களுக்கு இடையில் நீண்ட காலமாக மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் குறித்த வன்முறை கும்பலைச் சேர்ந்த நபர் ஒருவர் மீது கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு பழிவாங்கும் விதமாகவே கடந்த திங்கட்கிழமை தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வைத்தியசாலைக்குச் சென்ற நபர் மீது மற்றைய வன்முறைக் கும்பலைச் சேர்ந்தவர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும் பொலிஸார் முல்லைத்தீவு , புதுக்குடியிருப்பு பகுதியில் பதுங்கி இருந்த மூவரை கைது செய்ததுடன் தாக்குதலுக்குப் பயன்படுத்திய ஹயஸ் ரக வாகனம், 2 வாள்கள் என்பனவற்றையும் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# அரச நிதியை தவறாக பயன்படுத்தியமை நிரூபிக்கப்பட்டால் பதவி விலகத் தயார்

## சஜித் சவால்

தனிப்பட்ட காரணங்களுக்காக அரச நிதியைப் பயன்படுத்தியமைக்கான ஆதாரம் இருந்தால் தான் உடனடியாக பதவி விலகத் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வின் போது ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் குற்றச்சாட்டுக்கு பதில் வழங்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சஜித் பிரேமதாஸ எந்த தவறும் செய்ததாக நேரடியாகக் குற்றம் சாட்டவில்லை என்றாலும், கணக்காய்வு அறிக்கைகளின்படி, கிட்டத்தட்ட 10 ஆயிரம் கோடி நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

அதேவேளை கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர்களுக்கு வெளியே 1,300 ஊழியர்கள் பணியமர்த்தப்பட்டு அவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டதுஎன்றும் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றம் சாட்டியிருந்தார்.

எவ்வாறாயினும் அரசநிதியை தனது சொந்தப்பயன்பாட்டுக்காகவோ அல்லது கட்சிக்காகவோ தவறாகப் பயன்படுத்தியதற்கான ஆதாரம் இருந்தால் தான் பதவி விலகத் தயார் என சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார். (05)

# மதில் இடிந்து வீழ்ந்து ஒருவர் பரிதாப சாவு

கண்டி கடுகன்னாவை வைத்தியசாலையில் மதில் இடிந்து வீழ்ந்ததில் உடுநுவர பகுதியை சேர்ந்த 32 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார். வைத்தியசாலையில் பழைய மதிலின் புனர்நிர்மாணப் பணிகளின் போது அது இடிந்து வீழ்ந்ததில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக கண்டி மாவட்ட இடர் முகாமைத்துவ உதவி பணிப்பாளர் இந்திக ரணவீர குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், சடலம் கடுகன்னாவை - ஹேனாவல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை, கடந்த நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வெல்லம்பிட்டி - வேரகொட வித்தியாலயத்தில், மதில் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 6 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# ‘உத்தர’ கடற்படைத் தள வைத்தியசாலையில் 75ஆவது ஆண்டு நிறைவு இரத்ததான நிகழ்வு

இலங்கை கடற்படையின் 73 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு, காங்கேசன்துறையில் ’உத்தர’ கடற்படை தள வைத்தியசாலையில் இரத்ததான நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் கடற்படை தளபதிகள் உள்ளிட்ட 195 கடற்படையினர் இரத்த தானம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)



# ஈ-60 கொள்கை ஜனவரி முதல்

## விவசாய அமைச்சர் தகவல்

நாட்டில் உற்பத்தி செய்யப்படும், தேயிலை கொழுந்தின் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக -60 கொள்கை ஜனவரி மாதம் முதல் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு உரிய தரப்பினர்களுக்கு விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர ஆலோசனை வழங்கியுள்ளார்.



ஈ-60 கொள்கை என்பது, தேயிலை உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இலைகளில் குறைந்தது 60 சதவீதம் உயர் தரத்தில் இருக்க வேண்டும் என்பதாகும்.

இந்நிலையில், ஏதேனும் ஒரு நிறுவனம் இதனை மீறினால் அவர்களின் உரிமத்தை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை தேயிலை சபைக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

(05)

# பள்ளிவாசல் மற்றும் மத்ரஸாக்களை புதிதாக பதிவு செய்ய முடியவில்லை

## தௌபீக் எம்.பி. கவலை

ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னர் பள்ளிவாசல் மற்றும் மத்ரஸாக்களை புதிதாக பதிவு செய்ய முடியவில்லை எனவும் அதற்கான ஏற்பாடுகளை செய்துதருமாறும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கேட்டுக் கொண்டுள்ளார்.

சுற்றுலா மற்றும் காணி அமைச்சு, புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எம்.எஸ். தௌபீக் இந்த கோரிக்கையை விடுத்திருந்தார்.

யுத்தம் நிறைவடைந்து நீண்ட காலமாகியும் காணிப்பிரச்சினைகள் இதுவரையில் தீர்க்கப்படவில்லை என்றும் இதுதொடர்ப்பில் பல சந்தப்பங்களில் பேசியும் உரிய அதிகாரிகளை சந்தித்தும் எந்த முடிவும் கிடைக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிண்ணியா கல்லறிப்பு காணி, உப்பாறு தளவா காணிகள், குச்சவெளி ஆலம்குளம், புல்மேட்டை மற்றும் ஏனைய உரியவர்களுக்கு வழங்க நடடிக்கை எடுக்க வேண்டும் எனவும் திருகோணமலை மாவட்டத்தில் பிரதேசங்களுக்கான எல்லைகள் நிர்ணயிக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்..

திருகோணமலை மாவட்டமானது சுற்றுலாத்துறைக்குப் பிரசித்தி பெற்ற மாவட்டம் என்பதால் அதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கோள்ளுமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கேட்டுக்கொண்டுள்ளார்.

(05)

# பாலியல் இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டில் கல்முனைப் சப்இன்ஸ்பெக்டருக்கு மறியல்

பாலியல் இலஞ்சம் கோரிய சம்பவம் தொடர்பில் கைதான கல்முனை தலைமையக பொலிஸில் கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பகுதியை சேர்ந்த 33 வயதுடைய பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே 58 வயதான குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியபோது அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

(05)







# தெல்லிப்பழைத் தாக்குதல் சம்பவங்கள்: யாழில் இதுபோன்று இனிமேல் நடக்காது

'அண்மையில் இடம்பெற்ற தெல்லிப்பழைத் தாக்குதல் சம்பவம் போன்று இனி யாழ்.மாவட்டத்தில் எந்தவொரு தாக்குதல் சம்பவமும் நடைபெற நாம் அனுமதிக்கமாட்டோம்' என யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வன்முறை சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெல்லிப்பழை தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை 48 மணி நேரத்திற்குள் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் மற்றும் ஏனைய பொலிஸ் பிரிவினர் இணைந்து கைது செய்துள்ளார்கள்.

அவர்கள் பயணித்த வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர். அதேவேளை யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படுவோர் பொலிஸாரால் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றார்கள்.

சில குழுவினரிடையே இருந்து வரும் பகைமையின் காரணமாகவே தற்போதைய வன்முறை சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக தெல்லிப்பழை சம்பவம் கூட ஏற்கனவே இரு குழுக்களுக்கிடேயே உள்ள முரண்பாட்டிற்கு பழி தீர்க்கும் விதமாகவே இடம்பெற்றுள்ளது.

அதே போல யாழ்ப்பாண மாவட்டத்தில் கூலிக்கு அமர்த்தி வன்முறை சம்பவங்களில் ஈடுபடுவதை இனியும் அனுமதிக்க மாட்டோம். அவ்வாறு யாராவது ஈடுபட்டால் அவர்களை கைது செய்து சட்டத்தின் முன் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை நாம் முன்னெடுத்துள்ளோம்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது பொலிஸாரின் கடமை. எனவே பொதுமக்களுக்கு பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவார்கள். பொதுமக்கள் இந்த விடயங்கள் தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை. சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு யாழ்ப்பாணத்தில் பொலிஸார் தொடர்ச்சியாக செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.12.2023இல் வெளியிடப்பெற்றது.